

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஏப்ரல் 06, 2017 | புரட்சி 16 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00


## பாரூக்கின் தந்தை ஹமீது உருக்கமான பேட்டி

# “திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைய விரும்புகிறேன்”





Farook's dad to join rationalist outfit

CRIME DIARY

“பெரியார் என்ற தலைவர் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; அவரது கொள்கைகள் பற்றி தெரியாது. ஆனால் அவரின் பகுத்தறிவுக் கொள்கைகள்தான் இன்றைய தேவையாக இருக்கிறது என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன்” என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டுக்கு (மார்ச் 31) அளித்த பேட்டியில் படுகொலை செய்யப்பட்ட பாரூக்கின் தந்தை ஆர் ஹமீது (54) கூறியிருக்கிறார். “தந்தை பெரியாரின் கொள்கைகளை நான் படிக்கத் தொடங்கி விட்டேன்” என்றும் அவர் கூறினார். கோவை உக்கடம் பகுதியில் மக்கள் நெருக்கடி மிகுந்த பிலால் எஸ்டேட் எனும் குறுகிய வீதியில் அவரது சிறிய வீட்டில் அமர்ந்து பேசிய அவர், “நான் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைவது என்று முடிவு செய்துள்ளேன்” என்றார். “மூட நம்பிக்கை களுக்கு எதிராக நான் போராடப் போகிறேன். ஆனால் மதங்களுக்கு எதிராகப் பேசுவதில் எனக்கு அவ்வளவாக ஆர்வம் இல்லை. நம்முடைய ‘ஆன்மா’தான் கடவுள் என்று நம்புகிறேன்” என்றார் அவர். “இது ஏதோ உணர்ச்சிவசப்பட்டு நான் எடுத்த முடிவு அல்ல. நன்றாக சிந்தித்து எடுத்த முடிவு” என்றும் அவர் கூறினார். “இது குறித்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் கலந்து பேசவிருக்கிறேன்; அதற்குப் பிறகு மூடநம்பிக்கைகளை எதிர்க்கும் போராட்டத்தில் எப்படிப் பங்காற்றுவது என்பது குறித்து முடிவு செய்வேன்” என்றும் அவர் கூறினார்.

என்னுடைய மகன் கொள்கைகளை பேசியதற்காகவே கொலை செய்யப்பட்டான். வேறு எந்த தனிப்பட்ட காரணமும் இல்லை என்று அவர் உறுதியாகக் கூறினார். “கொலை செய்தவர்களின் ‘ஆணை’யை ஏற்று, எனது மகன் மத - இறை மறுப்புக் கொள்கைகளை கைவிடுவதாக கூறியிருந்தால் அவன் உயிரோடு இருந்திருப்பான். ஆனால், என் மகன், அவன் ஏற்றுக் கொண்ட தத்துவத்தில் உறுதியாகவே இருந்தான். இப்படி ஒரு மகனுக்கு தந்தையாக இருப்பதில் பெருமைப்படு கிறேன்” என்றார் ஹமீது.

கொலையோ, வன்முறையோ எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வை வழங்கிடாது என்ற செய்தியை நான் சமுதாயத்துக்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவே திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைய வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளேன் என்று கூறிய அவர், “இஸ்லாம் வன்முறையை போதிக்கவில்லை. மதத்தின் பெயரால் கொலை செய்யும் உரிமை - எவருக்குமே இல்லை” என்றார்.

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தான் ஹமீதின் சொந்த ஊர். 8ஆம் வகுப்பு வரை படித்தார். 1983இல் உக்கடம் ‘பிலால் எஸ்டேட்’ பகுதியைச் சார்ந்த நஃபீஷாவை 1983இல் திருமணம் செய்து கொண்டார். மூன்றாண்டுகளுக்குப் பிறகு அவரது குடும்பம் சென்னைக்கு ஒரு வாடகை வீட்டில் குடியேறியது. மீண்டும் 2003இல் கோவை உக்கடம் பகுதிக்கே திரும்பியது. கொலை செய்யப்பட்ட பாரூக் 10ஆம் வகுப்பை முடித்து விட்டு பழைய இரும்பு பொருள்களை விற்கும் தொழிலை நடத்தி வந்தார்.

இதற்கிடையே பாரூக்கின் தந்தை ஹமீது சென்னை வால்டாக்ஸ் சாலையில் உள்ள ஒரு விடுதியின் நிர்வாகியாக பணியாற்றி வந்தார். கடந்த மார்ச் 16ஆம் தேதி இரவு 12.10 மணிக்கு பாரூக் கொலை செய்யப்பட்ட அதிர்ச்சி செய்தியை உறவினர்கள் தொலைபேசி வழியாக தெரிவித்த போது ஹமீது சென்னையில்தான் இருந்தார். “என்னுடைய மனைவிக்கும், மருமகள் ரஷீத்தா வுக்கும், பாரூக் திராவிடர் விடுதலைக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டது தெரியும். ஆனால், எனக்கு இந்த செய்தி தெரியாது.

## ‘கொள்கைக்காகவே பலியான மகனுக்காகப் பெருமை அடைகிறேன்’

கோவையில் இந்து முன்னணி பொறுப்பாளர் சசிகுமார், கொலை செய்யப்பட்ட போது கோவையில் நடந்த கலவரத்தையொட்டி எனது மகன் கைது செய்யப்பட்டபோதுதான் அவன் திராவிடர் விடுதலைக் கழகத்தில் சேர்ந்து செயல்படுகிறான் என்பதே எனக்குத் தெரிந்தது. பாரூக் வழக்கை திராவிடர் விடுதலைக் கழகமே எடுத்து நடத்தியது. பாரூக் மீது குண்டர் தடுப்புச் சட்டம் பொய்யாக போடப்பட்டது. அறிவுரைக் குழுமத்தில் அந்த சட்டம் நீக்கம் செய்யப்பட்டு பாரூக் விடுதலை செய்யப்பட்டதற்கு திராவிடர் விடுதலைக் கழகம் தான் காரணம் என்றார் ஹமீது. (அறிவுரைக் குழுமத்தில் பாரூக் மீதான குண்டர் சட்டத்தை எதிர்த்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாதாடினார் என்பது குறிப்பிடத்தக்கது - ஆர்)

இவ்வாறு ‘டைம்ஸ் அப் இந்தியா’ தனது செய்திக் கட்டுரையில் எழுதியிருக்கிறது.

## “எங்கள் கழகத்தில் இணைவதைவிட அவருடைய பாதுகாப்பே எங்களுக்கு முக்கியம்”

இஸ்லாமிய அடிப்படை வாதத்துக்கு பலியான கழகத் தோழர் பாரூக்கின் தந்தை, திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தாலும் அவர் கழகத்தில் இணைவதைவிட அவரது பாதுகாப்பையே நாங்கள் முக்கியமாகக் கருதுகிறோம்” என்று கோவை மாவட்டக் கழகத் தோழர்கள் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஏட்டுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளனர். இது குறித்து ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ வெளியிட்டுள்ள செய்தி:

“பாரூக்கின் தந்தை திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைத்துக் கொள்ள முன் வந்தாலும் கோவை மாவட்ட கழகத்தின் தோழர்கள் பாரூக்கின் தந்தை பாதுகாப்பே முக்கியம். அது பற்றித் தான் நாங்கள் கவலைப்படுகிறோம் என்று கூறினார்கள். இப்போது எங்கள் கவலை எல்லாம் பாரூக்கின் இரண்டு குழந்தைகளுக்கும் எதிர்காலத்தில் கல்வி வழங்க வேண்டும் என்பதுதான். வழக்கறிஞர் ஆக வேண்டும் என்பது ஒரு குழந்தையின் விருப்பம். அது குறித்தே நாங்கள் சிந்தித்து வருகிறோம். மற்றபடி பாரூக்கின் தந்தை எங்களது கழகத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் எங்கள் கழகம் முனைப்பு காட்ட வில்லை” என்று கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக செயலாளர் நேருதாசு கூறினார்.

பாருக்கின் குடும்பத்தினரும் இதே கவலையைத்தான் தெரிவித்தார்கள். பாரூக்கிற்கு நேர்ந்த கதி அவரது தந்தை ஹமீதுக்கும் நேர்ந்து விடக் கூடாது என்று நாங்கள் அஞ்சுகிறோம். மத அடிப்படைவாதிகளால் ஹமீதும் குறி வைக்கப்படலாம் என்ற பயம் இருக்கிறது. எனவே அவரை தனியாக எங்கும் நாங்கள் வெளியே அனுப்பவோ பயணம் செய்யவோ அனுமதிப்ப தில்லை” என்று பாரூக்கின் மைத்துனர் அய். ஷாஜஹான் கூறினார். ஹமீது எங்கு சென்றாலும் – ஷாஜஹான் துணையாக செல்கிறார்.

## ‘இனமுரசு’ சத்தியராஜ், தோழர் பாரூக் குடும்ப நிதியாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கினார்

‘இனமுரசு’ நடிகர் சத்தியராஜ், பகுத்தறிவு கருத்துக்களை பேசிய காரணத்தினால் இசுலாமிய அடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட தோழர் ஃபாருக் குடும்ப நிதியாக ரூ. 1,00,000/ (ரூபாய் ஒரு லட்சம்) காசோலையாக சென்னை மாவட்டக் கழக பொறுப்பாளர்களிடம் வழங்கினார்.



திராவிடர் விடுதலைக் கழக தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், மாவட்டச் செயலாளர் உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், செந்தில், எப்.டி.எல்., ஆகியோர் நடிகர்சத்யராஜ் இல்லம் சென்று காசோலையைப் பெற்றுக் கொண்டனர்.

# அரசுத் திட்டங்கள் தோல்வி: நெருக்கடிகள் அதிகரிப்பு

# மோடி ஆட்சியில் முடக்கப்படும் வேலை வாய்ப்புகள்

“இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 35 வயதுக்கு குறைவான வயதுடையவர்கள் 65 சதவீதம். இந்த இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தவித்து வருகின்றனர். இவர்களை ஒருங்கிணைத்து இவர்களின் திறன்களை நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தால் 1 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்’’. இது 2013-ம் ஆண்டு இறுதியில் ஆக்ராவில் பிரதமர் நரேந்திர மோடி தேர்தல் பிரச்சாரத்தில் பேசியது.

“தற்போது இந்தியாவில் 5 கோடி பேர் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். 2020-ம் ஆண்டுக்குள் 5 கோடி பேரின் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும்’’ என்று தொழிலாளர் அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயா கடந்த மாதம் தெரிவித்துள்ளார். ஆனால் உண்மையிலேயே தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு எவ்வளவு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணி அரசால் 2020-ம் ஆண்டுக்குள் 5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கமுடியுமா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

**அதிகரிக்கும் வேலை வாய்ப்பின்மை**

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு எவ்வளவு வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன என்பதை புள்ளிவிவரங்களில் தேடும் பொழுது கடந்த 2014-ம் ஆண்டில் மொத்தம் 4.9 லட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது. 2015ம் ஆண்டில் வெறும் 1.35 லட்சம் வேலைவாய்ப்புகள் மட்டுமே உருவாகியிருக்கின்றன. இது கடந்த ஏழு ஆண்டுகளில் உருவான வேலைவாய்ப்பை விட குறைவானதாகும்.

இதுபோன்ற புள்ளிவிவரங்கள் மோடி அரசாங்கத்துக்கு சாதகமானதாக இல்லை. முக்கியத் துறைகளில் வேலைவாய்ப்பு உருவாக்கம் முடங்கி கிடக்கிறது. இந்தியாவை பொறுத்தவரை உற்பத்தி துறை தொடர்ந்து அதிக வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடியது. ஆனால் கடந்த 2016-ம் ஆண்டில் ஏப்ரல் முதல் ஜூன் வரை உற்பத்தித் துறை, கட்டுமானம், போக்குவரத்துத் துறை, வர்த்தகத் துறை ஆகியவற்றில் 70,000 வேலைவாய்ப்புகள் மட்டுமே உருவாகியுள்ளன. அதுமட்டுமல்லாமல் மிகப் பெரிய தொழில்துறை நிறுவனமான லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் கடந்த 2016-ம் ஆண்டில் மட்டும் 14,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்திருக்கிறது.

உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் ‘மேக் இன் இந்தியா திட்டம்’ கொண்டுவரப்பட்டது. இதுபோன்ற திட்டங்களை மத்திய அரசு கொண்டுவந்தாலும் உற்பத்தித் துறையை சார்ந்த பொருட்களின் விற்பனை கடந்த 2015-16ம் ஆண்டில் 3.7 சதவீதமாக குறைந்துள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டில் இந்த சரிவைக் கண்டுள்ளது. இந்த சரிவு தொடருமானால் ஊழியர்கள் பணிநீக்கம் செய்வது தொடரும் என்கின்றனர் வல்லுநர்கள். இப்படி ஒரு சூழ்நிலை நிலவி வருகையில் அதிக அளவு வேலைவாய்ப்பை ஓரிரு ஆண்டுகளில் எப்படி உருவாக்கமுடியும் என்பது கேள்வியாக இருக்கிறது.

சேவைத்துறை இந்தியாவில் வளர்ச்சி அடைந்து வருகிறது. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இ-காமர்ஸ் நிறுவனங்கள், லாஜிஸ்டிக்ஸ் சார்ந்த நிறுவனங்கள் அதிக அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கின. ஆனால் தற்போது இ-காமர்ஸ் துறை லாபத்தில் இயங்காதது, மூலதன நெருக்கடி போன்ற காரணங்களால் பல்வேறு நிறுவனங்கள் தங்களது ஊழியர்களை பணிநீக்கம் செய்துவருகின்றன. கடந்த வாரத்தில் ஸ்நாப்டீல் நிறுவனம் மட்டும் 600 ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளது. அதிக வேலைவாய்ப்பளிக்கும் துறைகளும் தற்போது தொய்வடைந்து வருவதால் பட்டதாரிகளின் நிலை கேள்விகுறியாகியுள்ளது.

**அரசு திட்டங்களின் தோல்வி**

வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கில் மத்திய அரசு இரண்டு முக்கியத் திட்டங்களை கொண்டு வந்தது. பிரதான் மந்திரி வேலை உருவாக்கும் திட்டம், தீன் தயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்யா யோஜனா என்ற பெயரில் இந்த திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. ஆனால் இந்தத் திட்டங்கள் பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கவில்லை. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு மூன்றாண்டுகளில் இந்த திட்டங்களின் மூலம் மொத்தம் 11 லட்சத்திற்கும் குறைவான வேலை வாய்ப்புகளே இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன.

இளைஞர்கள் திறனை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு திறன்மிகு இந்தியா திட்டத்தை 2015-ம் ஆண்டு ஜூலை மாதம் கொண்டுவந்தது. 2022-ம் ஆண்டுக்குள் 40 கோடி இளைஞர்களை திறன் படைத்தவர்களாக மாற்றும் நோக்கில் கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் பல்வேறு துணைத்திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த ஆண்டு பட்ஜெட்டில் கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் ஓரளவு ஊழியர்களின் திறனை மேம்படுத்தி வருகிறது. ஆனால் இவர்களுக்கான வேலைவாய்ப்பையும் அரசு உறுதிப்படுத்தினால் மட்டுமே திட்டம் வெற்றி யடையும்.

**அச்சுறுத்தும் பாதுகாப்புவாதம்**

உலகம் முழுவதும் பாதுகாப்புவாத கொள்கை தலைதூக்கி வருகிறது. அமெரிக்காவில் விசா கொள்கையில் கடுமையான விதிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறி இருக்கிறது. சவூதி அரேபியாவில் தொடர்ந்து கச்சா எண்ணெய் விலை சரிவால் 90 லட்சம் வெளிநாட்டு ஊழியர்களின் நிலை கேள்வி குறியாகி இருப்பது. இப்படி உலகம் முழுவதும் பாதுகாப்பு வாத கொள்கைகள் வலிமை யடைந்து வருகின்றன. இது வளர்ந்த நாடுகளுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது.

ஆனால் வளரும் நாடுகள் மற்றும் ஏழை நாடு களுக்கு மிகப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும். இந்தியாவிலிருந்து பல்வேறு நாடுகளுக்குச் சென்று இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை ஊழியர்களாக பல்வேறு நாடுகளில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள்.

**பணமதிப்பு நீக்கத்தால் பாதிப்பா?**

இந்திய ஊழியர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முறைசார் தொழிலாளர்கள் அல்லது முறைசாரா தொழிலாளர்கள். பணமதிப்பு நீக்கத்துக்குப் பிறகு கிராம புறத்திலும் நகர்புறத்திலும் உள்ள முறைசாரா தொழிலாளர் கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். அதிக அளவில் முறைசாரா தொழிலாளர்களை கொண்ட கட்டுமானத்துறை பணமதிப்பு நீக்கத்தால் பெரிய அளவில் பாதிக்கப் பட்டது. புதிய திட்டங்களை அதிக அளவு தொடங்க முடியவில்லை. முதலீடுகள் பெறுவதிலும் தேக்கம் ஏற்பட்டுள்ளதால் அதிக அளவு ஊழியர்களை வேலைவாய்ப்பில் உட்படுத்த முடியாத நிலை தொடர்கிறது.

2020-ம் ஆண்டு 5 கோடி நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்பது மிகப் பெரிய இலக்கு. தற்போதைய சூழல் தொடருமானால் இது சாத்தியமில்லை. அதுமட்டுமல்லாமல் உலக பொருளாதாரத்தின் மந்தநிலை, பாதுகாப்புவாத கொள்கையால் ஏற்படும் வேலையிழப்பு, உற்பத்தி துறைவளர்ச்சி குறைவாக இருப்பது போன்ற காரணங்களால் புதிய வேலை வாய்ப்புகளை அதிக அளவில் உருவாக்கமுடியாது. இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் வேலை வாய்ப்பு என்பது அனைத்து நாடுகளிலும் மிகப் பெரிய விஷயமாக மாறப் போகிறது.

அதிக எண்ணிக்கையில் பட்டதாரிகள் ஆண்டு தோறும் வெளியேறி வருகின்றனர். இவர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்வது என்பது அரசுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கப்போகிறது. உற்பத்தித் துறை வளர்ச்சி, அதிக அளவு அந்நிய முதலீட்டை பெறுவது, தனியார் துறையில் வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவது, திறன்மிகு ஊழியர்களை உருவாக்குவது போன்றவற்றால் மட்டுமே 5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கமுடியும். மொத்த மக்கள் தொகையில் அதிக அளவு இளைஞர்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தினால் வளர்ச்சி என்ற இலக்கை எளிதாக அடைய முடியும்.

ஆனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தாவிட்டால் மிகப் பெரிய அளவில் சமூக பதற்றம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது என்பதை அரசு நினைவில் கொள்ள வேண்டும்.

**‘வணிகமணி’**

# மேட்டூர் – குருவாரெட்டியூர் கழகப் பொதுக் கூட்டங்கள்: சாக்கோட்டை இளங்கோவன் சிறப்புரை

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பெரியாரியல் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் 20.3.2017 அன்று மேட்டூர் சதுரங்காடியில் நடைபெற்றது. மேட்டூர் நகர தலைவர் செ. மார்ட்டின் தலைமை வகிக்க, தலைமை செயற்குழு உறுப்பினர் அ. சக்திவேல், சென்னை இரண்யா ஆகியோர் உரைக்குப் பின் சாக்கோட்டை இளங்கோவன் சிறப்புரையாற்றினார். மேட்டூர் டி.கே. ஆர். இசைக்குழுவின் பறைமுழக்கம் மற்றும் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மீ. அம்ஜத்கான் நன்றியுரையாற்ற கூட்டம் நிறைவுற்றது.

**குருவையில் :** ஈரோடு வடக்கு மாவட்டம் குருவரெட்டியூர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் “ஆணவ கொலைகளும், அண்மைகால பெண்கள் கொலைகளும்; தீர்வை நோக்கி’’ எனும் தலைப்பில் பொதுக்கூட்டம் 19.03.2017 ஞாயிறு அன்று குருவை பெரியார் திடலில் உள்ள அரங்கநாதன் நினைவரங்கத்தில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தின் முதல் நிகழ்வாக மேட்டூர் டி.கே.ஆர். பகுத்தறிவு இசைக்குழுவின் சார்பாக பறையாட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திக சோதி தலைமையேற்க வேல்முருகன் வரவேற்புரை நிகழ்த்தினார். கழகப் பொறுப்பாளர்கள் வேணுகோபால், இராம .இளங்கோவன் உரையைத் தொடர்ந்து, சாக்கோட்டை மு.இளங்கோவன் சிறப்புரை யாற்றினார். திலிபன் நன்றி கூறினார். நிகழ்வில் மாநில, மாவட்ட கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். பொதுக்கூட்டம் தொடங்கும் முன்பு மத வெறிக்கு பலியான கோவை கழகத் தோழர் பாரூக் மரணத்திற்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.





# காவேரிப்பட்டினம் – அரசு மருத்துவமனை வளாகத்தில் ‘விநாயகன்’ வழிபாடு : மாவட்டக் கழகம் எதிர்ப்பு

கிருட்டிணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவ வளாகத்தில் அரசாணைகளுக்கு எதிராக விநாயகன் சிலையை திடீரென வைத்து பூஜைகளை நடத்தி வருகிறார்கள். அங்கே மருத்துவராக பணியாற்றும் வட்டார மருத்துவ அலுவலர் இரா. அரிராம் என்பவரே முன்னின்று இந்த பூஜைகளை நடத்திக் கொண்டிருக்கிறார். தகவல் அறிந்து கிருட்டிணகிரி மாவட்ட கழகத் தலைவர் தி.குமார் தலைமையில் கழகத் தோழர்கள் மார்ச் 28ஆம் தேதி காலை மருத்துவ அலுவலர் அரிராமைச் சந்தித்து, அரசு வளாகங்களில் கோயில் கட்டுவது சட்டப்படி தவறு என்பதை சுட்டிக் காட்டி மனு ஒன்றை அளித்தனர். மனுவை அளித்து விட்டு வெளியே வரும்போது முன்கூட்டியே தகவல் அறிந்த பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். காரர்கள் மாவட்ட தலைவர் குமார் மற்றும் தோழர்களை சூழ்ந்து கொண்டு தாக்குதல் நடத்தும் நோக்கத்தில் வாக்குவாதம் செய்தனர். தனது உயிருக்கோ, உடைமைகளுக்கோ ஆபத்து ஏற்படுமானால் அதற்கு மருத்துவர் அரிராம் மற்றும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.காரர்களே பொறுப்பு என்று காவேரிப்பட்டினம் காவல்துறை ஆய்வாளரிடம் மாவட்டக் கழக தலைவர் தி. குமார் புகார் மனு அளித்துள்ளார்.

இதற்கிடையே சுகாதாரத் துறை துணை இயக்குனருக்கு மருத்துவர் இரா. அரிராம் வளாகத்தில் விநாயகன் சிலை அமைப்பதை நியாயப்படுத்தி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் மருத்துவ வளாகத்தில் கோயில் அமைக்க பொது மக்களே கோரிக்கை விடுத்ததால் அதற்கு தடைபோடவில்லை என்று தனது சட்டவிரோத செயல்பாட்டுக்கு பொது மக்களையும் துணைக்கு இழுத்துள்ளார்.

“பிரசவம் பார்க்க வரும் தாய்மார்கள் மற்றும் நோயாளிகள் தங்களின் மன நிம்மதிக்கு வழிபாடு நடத்த விரும்புகிறார்கள். எனவே மத நல்லிணக்கம் மேம்பட அவர்களே சொந்த முயற்சியில் வழிபாட்டு இடங்களை அமைக்க முன் வந்துள்ளனர். நோயாளிகள் நல சங்கமும் இதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. நிர்வாக ரீதியாக நாங்கள் எழுத்துப்பூர்வமாக இதை அனுமதிக்கவில்லை. அவர்களே வழிபாட்டு சின்னங்களை அமைப்பதால் நாங்கள் தடை செய்யவில்லை. இது தவிர சுதந்திர போராட்ட தேசத் தலைவர்கள் படங்களும், பெரியார், அம்பேத்கர், காமராசர் போன்றோர் பொன்மொழிகளும் இடம் பெற வேண்டும் என்ற கோரிக்கையும் வந்துள்ளது. கோயில் கட்ட திராவிடர் விடுதலைக் கழகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அனைத்து மதம் சார்ந்தோரும் ஒற்றுமையாக மதம் சார்ந்த சின்னங்களை அமைக்க விரும்புகின்றனர். இது குறித்து ஆலோசனை வழங்க வேண்டும்” என்று மருத்துவர் அரிராம் துணை இயக்குனருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மருத்துவமனை நீதிமன்ற வளாகங்களில் எந்த மத வழிபாடு சின்னங்களுக்கும் அனுமதி இல்லை என்று மத்திய மாநில அரசு ஆணைகள் தெளிவாகக் கூறும் நிலையில், ‘விநாயகன்’ வழிபாட்டை நியாயப்படுத்த ஏனைய மதத்தினரையும் தனக்கு துணையாக அழைத்துக் கொண்டு, பெரியார், அம்பேத்கர், காமராசர் போன்ற தலைவர்களையும் இதில், தனக்கு ஆதரவாக இழுத்துக் கொண்டு சுகாதாரத்துறை இயக்குனருக்கு மறைமுக அழுத்தத்தை உருவாக்கியுள்ளார், மருத்துவர் இரா. அரிராம்.

உச்சநீதிமன்றம் நடைபாதைக் கோயில்களை அகற்ற வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு கண்டிப்பான உத்தரவுகளை பிறப்பித்து வருகிறது. அரசு வளாகங்களில் வழிபாட்டுத் தளங்களை அனுமதித்தால் பிறகு, அங்கே ‘பொது நல மன்றங்கள்’, ‘சேவை அமைப்புகள்’ என்ற பெயரில் தனியார் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்தால், அது மக்களின் விருப்பம் என்று, அனுமதிப்பார்களா?

சென்னை உயர்நீதிமன்றம் இப்படி - நீதிமன்றங்கள், மருத்துவமனை உள்ளிட்ட அரசு அலுவலகங்களில் சட்ட விரோதமாக கட்டப்பட்ட கோயில்களை இடிக்க உத்தரவிட்டுள்ளதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

# காவிச் சட்டையும் கருப்புச் சட்டையும் ஒன்றே தானாம்! கூறுகிறது தவ்ஹீத் ஜமாஅத்

பிறப்பால் இஸ்லாமியராக இருந்தாலும், திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்து மத, இறை மறுப்பாளராக இருந்தார் என்பதற்காக இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் வெறிகொண்ட அவரது இஸ்லாமிய நண்பர்களே பாரூக்கை படுகொலை செய்து காவல்துறையிடம் சரணடைந்துள்ளார்கள். சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இஸ்லாமிய கலை இலக்கியவாதிகள் இந்த படுகொலையை கண்டித்துள்ளனர். ‘தமிழ்இந்து’ நாளேடு, தமிழகத்தில் உருவாகி வரும் மோசமான சூழலின் வெளிப்பாடு என்று தலையங்கம் தீட்டியது. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு இலக்கிய வாதிகளின் அதிர்ச்சியை பதிவு செய்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, இந்திய தவ்ஹீத், விடுதலை சிறுத்தைகள் கட்சி கண்டனங்களைப் பதிவு செய்துள்ளது. பெரியார் இயக்கக் கொள்கையை பேசியதற்காக 31 வயது இளைஞர் ஒருவரை இழந்து நிற்கிறது திராவிடர் விடுதலைக் கழகம்.

தோழர் பாரூக்கை இழந்த நிலையிலும் இஸ்லாமியர்களுடனான உறவு எப்போதும் நீடிக்கும் என்றும், பார்ப்பன - ஜாதிய - இந்துத்துவா கொள்கைகளே திராவிடர் விடுதலைக் கழகத்தின் முதன்மையான எதிரிகள் என்றும், திராவிடர் விடுதலைக் கழகம் தெளிவாக அறிவித்தது. இந்த நிலையில் ‘தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்’ (டி.என்.டி.ஜே) என்ற அமைப்பு பெரியாரையும் பெரியார் இயக்கங்களையும் கடுமையான வார்த்தைகளால் வசை மொழிகளை அந்த இயக்கத்தின் அதிகாரபூர்வ பேச்சாளர் எம்.எஸ். சையது இப்ராகிம் என்பவர் (மாநில தணிக்கைக் குழு தலைவர்) ‘தலைமை ஜமுஆ, மண்ணடி’ அலுவலகத்திலிருந்து காணொளியாக அந்த அமைப்பு பரப்பி வருகிறது. அதில் ஆர்.எஸ்.எஸ். பஜ்ரங்தள் பயங்கரவாதிகளைப் போலவே கருப்புச் சட்டைப் பெரியார் இயக்கத்தினரும் இஸ்லாமியர்களுக்கு எதிரான பயங்கரவாதிகளே என்ற கருத்தில் பேசி இருந்தார். அதே கருத்தை அந்த அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான ‘உணர்வு’ ஏடும், ‘காவிச் சட்டையும் - கருப்புச் சட்டையும் ஒன்றே’ என்று பெரியார் இயக்கத்தின்மீது ‘வசை’ மொழிகளை அள்ளி வீசியுள்ளது. அந்த பெட்டிச் செய்தியை அப்படியே கீழே தந்துள்ளோம்.

*“நாத்திகர் ஃபாரூக் என்பவரது படுகொலையின் மூலம் ஒரு உண்மையை அல்லாஹ் இந்த உலகத்திற்கு பளிச்சிட வைத்துள்ளான்.*

*இஸ்லாத்தை அழிக்கத் துடிப்பவர்கள் காவி பயங்கரவாதிகள் மட்டும் தான் என்றும், இவர்களை எதிர்க்கும் கடவுள் மறுப்புக் கொள்கையில் இருப்பவர்கள் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் நெருக்கமானவர்கள் என்றும் சிலர் தப்புக்கணக்கு போட்டு வைத்திருந்தனர்.*

*ஆனால் அது தவறு.*

*காவி பயங்கரவாதிகள் எப்படி இஸ்லாத்தை அழிக்க துடியாய் துடித்துக் கொண்டிருக்கின்றார்களோ அது போலவே இந்த கருப்புச் சட்டை பயங்கரவாதிகளும் இஸ்லாத்தை அழிக்க சமயம் பார்த்துக் காத்துக் கொண்டுதான் உள்ளார்கள் என்பது பாருக் என்பவரது படுகொலையின் வாயிலாக வெளியுலகிற்கு வெட்ட வெளிச்சமாக்கப்பட்டுள்ளது.*

*கடவுள் மறுப்புக் கொள்கையில் இருக்கும் கருப்புச் சட்டை மூடர்கள் இந்த விஷயத்தில் இஸ்லாத்தை எந்த அளவிற்கு இழிவாக விமர்சித்தார்கள் என்பதையும், முஸ்லிம்களை தீவிரவாதிகளாக எந்த அளவிற்கு மிகவும் கீழ்த்தரமான நிலைக்கு இறங்கி சித்தரித்து அவதூறு பரப்பினார்கள் என்பதும் இந்த நிகழ்வின் வாயிலாக உள்ளங்கை நெல்லிக்கனியாக முஸ்லிம் சமுதாயத்திற்கு தெரிய வந்துள்ளது.*

*காவிச் சட்டையும், கருப்புச் சட்டையும் ஒன்றுதான்; நிறம் தான் வேறு.*

*இதன் மூலம் இஸ்லாத்தை அழிக்கத் துடிக்கும் விஷயத்தில் காவி பயங்கரவாதிகளும், கருப்புச் சட்டை மூடர்களும் சமமானவர்களே என்பதை அப்பாவி முஸ்லிம் சமுதாயத்திற்கு அல்லாஹ் அறிய வைத்து விட்டான்; அதற்காக படைத்த இறைவனுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.*

*காவி பயங்கரவாதிகளிடம் கவனமாக இருப்பது போல,*

*கருப்புச் சட்டை மூடர்களிடமும் கவனமாக இருப்போம்”*

- என்று எழுதியிருக்கிறது ‘உணர்வு’ ஏடு. இந்த ‘வசை மொழி’களுக்கு நாம் எதிர்வினையாற்ற விரும்பவில்லை.

# தமிழ்நாட்டில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் நிலை இதுதான்!

**தமிழ்நாட்டில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த ஆறு ஆண்டுகளில் (2011-2016) பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 94 சதவீதம் வழக்குகள் குற்றம்சாட்டப்பட்டவர்களின் விடுதலையிலேயே முடிந்திருக்கின்றன. ஜே.பி. அஜீ அரவிந்த் என்ற சமூக செயல்பாட்டாளர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், காவல் துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவுக்கு (சமூகநீதி மற்றும் மனித உரிமைக்கான காவல்துறை இயக்குனரகம்) எழுதிக் கேட்டு இத்தகவல்களைப் பெற்றுள்ளார். 6 ஆண்டுகளில் இந்த சட்டத்தின் கீழ் 1,934 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. தண்டிக்கப்பட்ட வழக்குகள் 108 மட்டுமே. காவல்துறை இந்த வழக்குகளை நடத்துவதில் ஆர்வம் காட்டாததும், காவல்துறையில் நிலவும் தலித் மக்களுக்கு எதிரான ஜாதிய மனப்பான்மையும் இதற்கு முக்கிய காரணம் என்று சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்த வழக்குகளை புலனாய்வு செய்யும் அதிகாரி ‘தலித்’ சமூகத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும் என்று சட்டம் கூறினாலும் சட்டம் இந்த விதியை கட்டாயப்படுத்தவில்லை. நீதித் துறையில் தலித் நீதிபதிகள் பிரதிநிதித்துவம் குறைந்து வருவதும் இதற்குக் காரணம் என்கிறார், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அரிபரந்தாமன்.**

# சங்கராபுரத்தில் ‘நீட்’ எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

30.3.2017 வியாழன் மாலை 3 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் அண்ணா சிலை அருகில் மருத்துவ படிப்பில் மத்திய அரசின் நீட் தேர்வை இரத்து செய்யக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் கழக சார்பில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ராமர் தலைமை தாங்கினார். கழகத்தினுடைய மாவட்ட செயலாளர் ச.கு.பெரியார் வெங்கட், சி. சாமிதுரை, ம. குப்புசாமி முன்னிலை வகித்தனர்.

1. நீட் தேர்வை ரத்து செய்; 2. கல்வி கடனை ரத்து செய்; 3. கல்வி கடனை நிபந்தனையின்றி வழங்கு; 4. வெளி மாநிலங்களில் படிக்கும் தமிழக மாணவர்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்து; 5. பல்கலைக் கழகங்களில் பயிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஏற்படும் ஜாதிய பாகுபாட்டின்மீது நடவடிக்கை எடு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அய்யனார் (தலைமைக் குழு உறுப்பினர்), கா.சு. நாகராசன் (பெரியார் திராவிடர் கழகம்), மதி (தி.வி.க.), தீனா (பெரியார் சிந்தனையாளர் இயக்கம், புதுச்சேரி) ஆகியோர் உரையாற்றினர். ம. திராவிட குமார் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கார்மேகம், ராஜேஷ், முருகன் மற்றும் புதுச்சேரி கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பாரூக் படுகொலையைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள்

இசுலாமிய அடிப்படைவாதிகளால் ஃபாரூக் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து 29.03.2017, புதன்கிழமை மாலை 5.00மணிக்கு சேலம் மாவட்டம், நங்கவள்ளி பேருந்து நிலையம் அருகே கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நங்கவள்ளி நகர துணைத் தலைவர் க.மனோஜ்குமார் தலைமையேற்க, நகர பொறுப்பாளர்கள் இராசேந்திரன், கண்ணன், செந்தில், உமாசங்கர் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.



நிகழ்வில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு, தலைமைக்குழு உறுப்பினர் சக்திவேல், நாமக்கல் மாவட்ட தலைவர் சாமிநாதன், நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் வைரவேல், சேலம் மாவட்ட அமைப்பாளர் அன்பு, திருச்செங்கோடு நகரகழகத் தோழர் தனலட்சுமி, ராசு வெங்கடேசு (ஈரோடு), திராவிடர் பண்பாட்டு நடுவத்தின் பொறுப்பாளர் முல்லைவேந்தன் உரையாற்றினர்.

திரைப்பட இயக்குனர் சங்ககிரி ராஜ்குமார் நிறைவாக பேசினார். மத தீவிரவாதங்கள் தலைதூக்குவது, தமிழகத்தின் தனித்துவத்தை குலைத்து விடும் என்பதை விளக்கி உரையாற்றினார். பழ. உமாசங்கர் நன்றி கூறினார்.

**மேட்டூரில்** – கழகத் தோழர் பாரூக் படுகொலையைக் கண்டித்துக் கழகத்தின் சார்பில் 27.3.2017 அன்று பெரியார் பேருந்து நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி. கோவிந்தராசு தலைமையேற்றார். ஆதித் தமிழர் பேரவை வீர சிவா, திராவிடர் கழகம் சந்திரசேகரன், திராவிட பண்பாட்டு நடுவம் சார்பில் ஒருங்கிணைப்பாளர் கி. முல்லைவேந்தன், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ. அன்பு, மேட்டூர் சட்டமன்றத் தொகுதி செயலாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மா. சிவக்குமார், கழக மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.



நிகழ்வில் நங்கவள்ளி, ஆர்.எஸ்., இராசிபுரம், கொளத்தூர், காவலாண்டியூர், தார்க்காடு, தண்டா காவேரி கிராஸ், சேலம் கேம்ப் பகுதி, திராவிடர் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தக்கலையில் பாரூக்குக்கு வீரவணக்கம்** – 26-03-2017 ஞாயிறு மாலை 4.00மணிக்கு 16-03-17 அன்று இசுலாமிய மத வெறியர்களால் கொல்லப்பட்ட பாரூக் வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி தக்கலை வட்டாட்சியர் அலுவலகம் எதிர்புறம் சூசையப்பா தலைமையில் தமிழ் மதி, ஜாண் மதி, நீதி அரசர், மஞ்சு குமார், இராஜேஸ் குமார், இரமேஸ் பாபு, சுனில், இராஜன், சாந்தா, சமூக ஆர்வலர் போஸ், அருள்ராஜ், பேரின்ப தாஸ், இளங்கோ, ஆன்றன் தமிழ்செல்வன், ஆர்மல் வீரவணக்க முழக்கங்கள் எழுப்பியும் இசுலாமிய மத வெறியர்களைக் கண்டித்தும் முழக்கங்கள்



எழுப்பி எதிர்ப்பை பதிவுச் செய்தனர். இரங்கல் உரை பெரியார் தொழிலாளர் கழக அலுவலகத்தில் தமிழ் மதி நிகழ்த்தினார்.

# “இனி கருஞ்சட்டை குடும்பம்தான் எனது உறவுகள்”

வேலூர் மாவட்டம் மகேந்திரவாடி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் க. முனியாண்டி (45) கடந்த பிப்.22 ஆம் தேதி உடல்நலக் குறைவில் முடிவெய்தினார். நெமிலி கழகத் தோழர் திலீபனோடு உற்ற தோழராக களப்பணியாற்றியவர் முனியாண்டி. அவரது படத்திறப்பு நிகழ்வு கடந்த மார்ச் 25ஆம் தேதி பகல் 11 மணியளவில் நெமிலி தனபாக்கியம் திருமண மண்டபத்தில் நிகழ்ந்தது. முனியாண்டியைப் போலவே அவரது துணைவியார் இந்துமதி, கிராமத்தில் வளர்ந்த பெண்ணாக இருந்தாலும் உறுதியாக பெரியார் கொள்கையை ஏற்றுக் கொண்டவர். படத்திறப்பு நிகழ்ச்சிக்கு அவரே தலைமை ஏற்றார். பெரியாரிய கொள்கை உணர்வோடு அவர் பேசியது உணர்வுபூர்வமாக இருந்தது. அவர் தனது உரையில் :-

“எங்களுக்கு சுயமரியாதை திருமணம்தான் நடந்திச்சி. இதுநாள் வரைக்கும் எங்களுக்குள்யே சண்டை வந்ததே இல்ல. இங்க பேசின எல்லோரும் சொன்னா மாதிரி எங்க வீட்டுக்காரருக்கு கோவம் வரவே வராது. நான் வேணும்னே சண்டைக்கு போவேன். அப்பகூட அவரு சிரிச்சிகிட்டே போயிடுவாரு. இனி நான் சண்டை போடறதுக்கூட ஆள் இல்லையே.

இங்க எல்லா தோழர்களும் சேர்ந்து கொடுத்த பணத்தை வாங்கியதை நினைச்சா எனக்கு உடம்பே கூசுது. யாரும் தப்பா நினைச்சிக்க வேணாம். எனக்கு சுயமரியாதையையும், தன்னம்பிக்கையையும் பெரியார் கத்துக் கொடுத்ததாலதான் அந்த பணம் வாங்குவதற்கு எனக்கு ஒரு மாதிரியா இருக்குது. உடனே என் பையன்கிட்ட அத கொடுத்தா அவனும் பெரியாரையும், அம்பேத்கரையும் படிச்சதால வேணாம்னு சொல்லிட்டான். திலீபன் தோழர் கிட்ட சொல்லி இந்த பணத்தை இயக்க செலவுக்கு வெச்சிக் கோங்கன்னு சொன்னேன். அவரும் வாங்காததால எனக்கு இதுவரைக்கும் ஒரு மாதிரியா இருக்குது.

என்னுடைய கணவர் இறந்த பிறகு ஊர் ஆளுங்ககிட்ட எந்த சம்பிரதாயமும் பண்ணாமதான் அடக்கம் செய்யணும்னு போராடினேன். ஆனா அவங்க பெரும்பான்மையா இருந்ததால என்னால எதுவும் பண்ண முடியல. இப்ப கூட உனக்கு யார் சொந்தக்காரங்க அப்படின்னு யாராவது கேட்டா நான் நம்ம தோழர்களைத்தான் சொல்லுவேன். எனக்கு இந்த கருஞ்சட்டை சொந்தமே போதும்.

இனிமே திக-வோ, திவிக-வோ எந்த கருப்பு சட்டை கூட்டம் நடந்தாலும் சரி நானும் என் பசங்களும் குடும்பத்தோடு கலந்துப்போம். எங்க சொந்தமும் – குடும்பமும் – கருப்பு சட்டைதான்” என்று அவர் கொள்கை உணர்வுடன் பேசியது அனைவரையும் நெகிழச் செய்தது.

தோழர் முனியாண்டி படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்து இரங்கல் உரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் திலீபன், இரா.ப. சிவா, இரா. திருநாவுக்கரசு (வி.சி.க.), ர. நரேன், சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் அன்பு தனசேகரன், இரா. உமாபதி, விழுப்புரம் அய்யனார் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.




**முடிவெய்திய கழகத் தோழர் முனியாண்டி படத்திறப்பில் அவரது துணைவியார் இந்துமதி உருக்கமான பேச்சு**

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**

கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை, ‘கரண்ட்’ அக்கவுண்ட்.
எண் : 1257115000002041 – IFSC KVBL0001257
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 06th April 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN